Date. 24.11.2025.

கூடுதல் மாவட்ட நீதிமன்றம் (விரைவு நீதிமன்றம் )

விழுப்புரம்.

OS.166/2023

வா.சா.1

பெயர். திரு.ராஜேந்திரன்

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு உதவியாளர் அவர்களால் சத்தியபிராமணம் செய்விக்கப்பட்டார்.

<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை:-</u>

இந்த வழக்கை நான் எதற்காக தாக்கல் செய்துள்ளேன் என்றால், போட்டுள்ள உடன்படிக்கை படி வேலை செய்யாததால், செய்த வரைக்கும் பணத்தை எடுத்துக்கொண்டு, மீதத் தொகையை திருப்பிக் கொடுக்க வேண்டும் என்றும், நஷ்ட ஈடு கொடுக்க வேண்டும் என்றும் கேட்டு வழக்கு போட்டுள்ளேன். உடன்படிக்கை எவ்வளவு ரூபாய்க்கு போடப்பட்டது என்றால், ரூ.31,42,000/- க்கு போடப்பட்டது. நான் ரூ.12,00,000/- கொடுத்துள்ளேன். ஒரு சதுரம் எவ்வளவு ரூபாய்க்கு பேசப்பட்டது என்றால், ரூ. 1,885/- க்கு பேசப்பட்டது. இந்த வழக்கில் நீதிமன்றத்தின் உத்தரவின்படி ஆணையர் வந்து பார்வையிட்டாரா? என்றால் பார்வையிட்டார். இன்ஜினியர் ஒருவரை கூட துணைக்கு வைத்துக் கொள்ள வேண்டும் என்று நீதிமன்றத்தில் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது என்றால் சரிதான். இன்ஜினியர் ஒருவர் வந்திருந்தார். அந்த இன்ஜினியர் இடத்தை பார்வையிட நீதிமன்றம் அனுமதிக்கிறது என்று மனு போட்டு உத்தரவு ஏதாவது வாங்கினேனா? என்றால் இது குறித்து ஆணையரைத்தான் கேட்க வேண்டும். ஆணையர் முறைப்படி இன்ஜினியரை நியமிக்க எந்த உத்தரவும் பெறாமல், தன்னிச்சையாக எனக்கு சாதகமாக ஒரு

அறிக்கையை தயார் செய்து தாக்கல் செய்துள்ளார் என்றால், தவறு. ஆணையர் முறையாக செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை பகுதியாக நிறுத்திவைக்கப்பட்டு ஒத்திவைக்கப்படுகிறது.**